தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 14, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 மார்ச் 28, செவ்வாய்க் கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல

இல்லாகித் தோன்றாக் கெடும்.”

இருப்பது, இயற்றக்கூடியது, இனியும் ஈட்டக்கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பதுபோல் தோன்றினாலும்கூட இல்லாமல் மறைந்து போய்விடும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

பேருந்து நிலையம்

***15980—திரு. கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரப் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்து புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 மார்ச் 28

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சியாகும். 2021 ஆம் ஆண்டின்படி அதன் உத்தேச மக்கட்தொகை 33,964 ஆகும். மேலும், தினசரி இங்கு வந்து செல்லும் மக்களின் எண்ணிக்கை, floating population மிகக் குறைவாக உள்ளது. 1992 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மதுராந்தகம் பேருந்து நிலையம் 25 பேருந்துகள் நிற்கக்கூடிய B-grade பேருந்து நிலையம் ஆகும். இப்பேருந்து நிலையத்தில் தற்போது ஒரே நேரத்தில் 10 பேருந்துகளுக்கு மேல் நிற்பதில்லை. எனவே, பேருந்து நிலையத்தை இடம் மாற்றி புதிதாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும், இப்பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்படுத்த பரிசீலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற போக்குவரத்து நெரிசலின் காரணமாக மதுராந்தகம் நகரப் பேருந்து நிலையத்தை இட மாற்றம் செய்து, புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அங்கு நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தினால், புதிய பேருந்து நிலையத்தை அமைக்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை மானியக் கோரிக்கை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று,

2023 மார்ச் 28]
தாங்கள் சொல்கிற கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நான் உறுதி அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளச்சல் தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகராட்சியில் உள்ள நகராட்சி பேருந்து நிலையத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மிகவும் பெரிய பகுதியாகும்; ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது. ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டுவது, அந்தப் பேருந்து நிலையம் மிகவும் நவீனமாகக் கட்டப்பட வேண்டும், அதற்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது. ஆகவே, மீண்டும் பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, பேருந்து நிலையத்தை நவீனமாகவும், விரிவாகவும் கட்ட தாங்கள் முன் வருவீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. உதயகுமார் அவர்கள் மதுராந்தகம் பற்றி கேட்டார். ஆனால், அவருடைய திருமங்கலம் தொகுதியில் ஏற்கெனவே பேருந்து நிலையம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. பல்வேறு பகுதிகளிலிருந்து கோரிக்கைகள் வந்தாலும், திருமங்கலம் வேகமாக வளர்ந்து வருகிற காரணத்தினாலும், பேருந்து நிலையத்தைப் பெரிதாகக் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். எனவே, ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுதலாக நிதி ஒதுக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மொத்தமுள்ள பேருந்து நிலையங்கள் 184 ஆகும். பேரூராட்சிகளில் 203 பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. ஆக, 387 பேருந்து நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. கடந்த 20 மாத காலத்தில் 114 பேருந்து நிலையங்கள் மாநகராட்சி, நகராட்சி,*

பேரூராட்சிகளில் புதுப்பிக்கப்பட்டும், புதிதாகக் கட்டப்பட்டும் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வள்ளியூரில் புதிதாகப் பேருந்து நிலையம் கட்ட 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: வணக்கம். மாண்புமிகு சபாநாயகரே சாட்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் சொல்வதை ஆய்வு செய்ய வேண்டும். முதலில் D.P.R. தயாரிக்கிறார்கள். அதாவது, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறபோது, அங்கு எவ்வளவு பேருந்துகள் வருகின்றன, மக்கட்தொகை எவ்வளவு இருக்கிறது, அதற்கு இடம் எவ்வளவு தேவை என்பதை அறிந்துதான் தயாரிக்கிறோம். எனவே, திரு. பிரின்ஸ் அவர்கள் சொல்வதையும் கருத்தில்கொள்ளலாம். அப்படி இருக்குமானால், வருங்காலத்தில் அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகராட்சி பொன் விழா கண்ட நகராட்சியாகும். புதுக்கோட்டை நகரப் பகுதியில் உள்ள புதிய பேருந்து நிலையம் 1982–1984 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தினசரி 10,000–க்கும் மேற்பட்ட பயணிகள் இந்தப் பேருந்து நிலையத்திற்கு வந்து பயணம் செய்கின்றனர். தற்பொழுது இந்தப் பேருந்து நிலையம் முழுவதும் சேதமடைந்து, கடந்த பருவகால மழையின்போது, மேற்கூரை இடிந்து விழுந்து, பேருந்து நிலையத்தில் கடை வைத்திருப்பவர் மற்றும் பயணிகள் இருவர் காயமடைந்தனர். இந்தப் பேருந்து நிலையத்தை புதுக்கோட்டை நகராட்சி நிர்வாகம் மற்றும் National Institute of Technology ஆகியன ஆய்வு செய்து, பேருந்து நிலையக் கட்டடம், பில்லர் மற்றும் கம்பிகள் மிகவும் பழுதடைந்து விட்டதாகவும், இது போதிய பாதுகாப்பு இல்லாத கட்டடம் எனவும் ஆய்வு அறிக்கையில் கூறியிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் மன்னர் காலத்தைப் போற்றக்கூடிய வடிவமைப்பில் புதிய நவீன வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையமாக, நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கட்டித்தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர்

2023 மார்ச் 28]
அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுகூட புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள பேருந்து நிலையப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதியதாக மேம்படுத்தப்பட்டது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல* National Institute of Technology–*ன் ஆய்வு அறிக்கையை ஆராய்ந்து, அவ்வாறு இருக்குமானால் புதுக்கோட்டை நகரத்திற்கு நிச்சயமாக—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நாளை மறுநாள் 30 ஆம் தேதி இத்துறையின் மானியக் கோரிக்கை இருக்கின்ற காரணத்தினால் இப்போது எதையும் என்னால் வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள் சொன்னதை நான் கருத்தில் கொள்வேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் ஆகிய மூவரையும் வணங்குகிறேன். எனது வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை பேரூராட்சிப் பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற மாசாணியம்மன் திருக்கோயில் உள்ளது. அந்தத் திருக்கோயிலுக்கு பொதுமக்கள் அதிகப்படியாக வந்து செல்கின்றனர். பேருந்து வசதியும் இருக்கிறது. அங்கு ஒரு நவீனமயமாக்கப்பட்ட பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் உறுப்பினரும் தங்கள், தங்கள் பகுதிகளில் இருக்கின்ற, அதிகமான மக்கள் வந்து செல்கின்ற பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் தேவை என்பதை வலியுறுத்தி வருகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில், 114 இடங்களில் அதுபோல் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சந்தைப் பகுதிகள் புதிதாகக் கட்டப்படுகின்றன. பேருந்து நிலையங்கள் புதிதாகக் கட்டப்படுகின்றன. நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலே வருவாய் ஈட்டக்கூடிய வகையில் கடைகள் கட்டித் தரப்படுகின்றன. வால்பாறை நகராட்சியில் அதிகமான நிதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற எதையும் சொந்த நிதியில் நம்மால் செய்து தரக்கூடிய அளவிற்கு வால்பாறை நகராட்சியில் நிதி நிலைமை இருக்கிறது. மாசாணியம்மன் திருக்கோயில் பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கலாம். அதுகுறித்து உரிய ஆய்வு செய்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கலாம். ஏனென்றால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, மற்ற செலவுகளுக்கெல்லாம் நிதி இல்லை என்றால்கூட, மூலதனச் செலவுக்கு அரசு இசைவளிக்கும். இதற்கு அனுமதி கேட்டு, பின்னர் அனுமதியைப் பெற்று இதைச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், நாகூர் நகரங்களில் மிகப் பெரிய அளவிற்கு போக்குவரத்து நெருக்கடி இருக்கிறது. நாகப்பட்டினம் பேருந்து நிலையம் ஏற்கெனவே மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அது இப்போது சீரமைக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினம்-விழுப்புரம் சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போது, நாகப்பட்டினத்திற்கு ஒரு புறநகர் பேருந்து நிலையம் அவசியமாகிறது. ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க 10 கோரிக்கைகளில் ஒன்றாக இதை எழுதிக் கொடுத்திருக்கிறோம். ரூ.30 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில்

2023 மார்ச் 28]

நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன். எனவே, மிக, மிக அவசியமான ஒரு கோரிக்கை. நாகப்பட்டினத்தில், வேளாங்கண்ணி, நாகூர், சிக்கல் சிங்காரவேலர் ஆகிய திருத்தலங்கள் இருக்கின்றன. மக்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து செல்கின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அந்த இடங்களெல்லாம் தெரியும்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *எனவே, அதைக் கருத்தில் கொண்டு எனது கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி மன்றத் தலைவர்களும், பேரூராட்சித் தலைவர்களும், நகராட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளிலிருந்து தேர்ந்தெடுத்துதான், அதற்கான நிதியை ஒதுக்குகின்ற பணி துறையின் சார்பாக நடைபெற்று வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *நான் இன்னும் பதில் சொல்லி முடிக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியா! சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதியில் இருக்கின்ற குறைபாடுகளில் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய 10 கோரிக்கைகளைக் கொடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டிருந்தார்கள். நீங்கள் இந்தக் கோரிக்கையை அதிலும் எழுதியிருக்கிறீர்கள். எனவே, நிச்சயமாக இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஏதோ எல்லோருக்கும் இப்படிச் சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். இது நடக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் கோயில் நகரமாக இருக்கிறது. அகில இந்திய அளவில் ஆன்மிக மக்கள் அதிகமாக வந்து செல்கின்ற, தொழிற்சாலைகள் நிறைந்திருக்கின்ற, வணிகர்கள் நிறைந்திருக்கின்ற பகுதி கும்பகோணம் ஆகும். அங்கிருக்கின்ற பேருந்து நிலையம் பழுதடைந்து, இன்றைக்கு இருக்கின்ற மக்கள் பெருக்கத்திற்கும், வாகனப் பெருக்கத்திற்கும் போதுமானதாக இல்லாத காரணத்தினால், புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்களை விரிவாக அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிறைய பணிகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். கும்பகோணத்தைப் பொறுத்தவரையில், அதற்குத் தேவையான இடத்தை அவர்கள் தருவார்களேயானால், அந்தப் பணியை நாங்கள் இந்த ஆண்டே எடுத்துக்கொள்வோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த ஆரணி நகராட்சியில் பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய இரண்டு பேருந்து நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. வளர்ந்துவரும் நகராட்சியில் மக்கள்தொகை அதிகமாக இருப்பதாலும், நெல், அரிசி வியாபாரிகள் மற்றும் பட்டுச் சேலை வியாபாரிகள் அதிகளவில் வாகனங்களில் செல்வதாலும், இந்த இரண்டு பேருந்து நிலையங்களை இணைத்து, ஒருங்கிணைந்த*

2023 மார்ச் 28]
பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் அமைப்பதைப் பொறுத்தவரையில், பொதுமக்களின் வசதிக்காகவும், மக்கள் சென்று வருகின்ற அந்தப் பணி இலகுவாக இருக்க வேண்டுமென்பதற்காகவும், அதே நேரத்தில் நகராட்சிக்கும் ஒரு வருவாய் வரும் என்ற காரணத்திற்காகவும் மூலதனச் செலவில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசு இசைவளித்துக் கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, ஆரணி நகரத்தில் இடம் இருக்குமானால் நிச்சயமாக அது செய்து தரப்படும்.*

திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை மேலும் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை நகரத்திற்கு புதிய பேருந்து நிலையமும், சந்தையும் அமைக்க வேண்டுமென்று, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் என்ன வேண்டுமென்றாலும் அதைச் செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், ஒரு மாதத்தில், சராசரியாக 20 இலட்சம், 30 இலட்சம் மக்கள் வந்து செல்கின்ற பகுதி; அந்தப் பகுதியைத் தரமுயர்த்துவதற்கு அரசு முழுமையாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதியில் கீழ்ப்பெண்ணாத்தூர் பேரூராட்சி, இன்றைக்கு தாலுகாவினுடைய தலைநகரமாக இருக்கின்றது. ஆனால், அதில் எந்தவித பேருந்து நிலையமும்*

[*2023 மார்ச் 28*

அரசின்மூலம் கட்டப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 10 கோரிக்கைகளில் ஒன்றாக, பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கின்ற பேரூராட்சிகளுக்கு பேருந்து நிலையங்கள் வேண்டுமென்ற கோரிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதுவரை பேருந்து நிலையங்கள் இல்லாமல் இருக்கும் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அங்கெல்லாம் பேருந்து நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 490 பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்த 490 பேரூராட்சிகளில் 203 பேரூராட்சிகளில் மட்டும்தான் பேருந்து நிலையம் இருக்கிறது. சில பேரூராட்சிகளில் பேருந்து நிலையம் தேவைப்படாமல், சாலையிலேயே பேருந்து நின்று செல்லும்படி இருக்கிறது. கீழ்ப்பெண்ணாத்தூரில் தேவைப்படுமானால், நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மக்கள்தொகை அடிப்படையிலும், தினந்தோறும் வந்துசெல்லும் பயணிகளின் அடிப்படையிலும் அதற்கு முன்னுரிமை தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***15581—திரு. மு. சக்ரபாணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, வானூர் ஒன்றியத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?